# யா / உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்

## ஆனைக்கோட்டை

## நிறுவுனர் தினமும்

## வருடாந்த பரிசளிப்பு விழாவும்

## 22.07.2017

# அதிபர் அறிக்கை

# யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்

## ஆனைக்கோட்டை

**நிறுவுனர் தினமும், வருடாந்த பரிசளிப்பு விழாவும்**

**2017**

**காலம் - 22.07.2017 (சனிக்கிழமை)**

**நேரம் - பி.ப 2.00**

**இடம் - பாடசாலை மண்டபம்**

தலைவர்

திருமதி. அம்பிகை சிவஞானம்

(வித்தியாலய அதிபர்)

ஆசியுரை

சிவஸ்ரீ. குகதாச குருக்கள் அவர்கள்

**பிரதம விருந்தினர்**

**உயர்திரு. S. சிவானந்தராஜா**

**(கோட்டக்கல்விப் பணிப்பாளர்**

**சண்டிலிப்பாய்க் கோட்டம்)**

**சிறப்பு விருந்தினர்**

**திருமதி. மெஜிதா தினேசன்**

**(முகாமையாளர், இலங்கை வங்கி,**

**மானிப்பாய்)**

கௌரவ விருந்தினர்

திருமதி. பராசக்தி சுப்பிரமணியம்

(நலன்விரும்பி)

நினைவுப்பேருரை

கலாநிதி. R. விஜயகுமாரன்

(சிரேஸ்ர விரிவுரையாளர், நிதிமுகாமைத்துவத் துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,

பாடசாலை அபிவிருத்திக் குழு

**அதிபரின் உள்ளத்திலிருந்து ............**




எமது பாடசாலையின் அயலில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் எல்லாம் வல்ல உத்துங்க விநாயகப் பெருமானை வணங்கி மதிப்பார்ந்த ஸ்தாபகர் பெரும்கன் அமரர் கைலாசபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து இவ் அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது அழைப்பை ஏற்று ஆசி கூற வருகை தந்திருக்கும் பெரும் மதிப்பிற்குரிய சிவஸ்ரீ குகதாசக் குருக்கள் அவர்களே, பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது

சண்டிலிப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர்திரு எஸ்.சிவானந்தராஜா அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி.மெஜிதா தினேசன் அவர்களே, கௌரவ விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் திருமதி.பராசக்தி சுப்பிரமணியம் அவர்களே நினைவுப்பேருரை ஆற்றுவதற்காக வருகை தந்திருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஸ்ர விரிவுரையாளர் கலாநிதி.R.விஜயகுமாரன் அவர்களே ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்களே அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, எமது பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற அன்புக்குரிய ஆசிரியர்களே எமது பாடசாலையின் ஆசிரியர்களே, அன்பு மிக்க மாணவச் செல்வங்களே, ஸ்தாபகர் குடும்பத்தினரே, அபிவிருத்திக் குழு உறுப்பினர்களே, நலன் விரும்பிகளே அனைவருக்கும் எனது மாலை நேர வணக்கம்.

ஆசிகூறி வாழ்த்த வருகை தந்து சிறப்பிக்கும் சிவஸ்ரீ குகதாசக் குருக்கள் அவர்கள் எமது பாடசாலையில் அக்கறையும் பெரும் ஈடுபாடும் கொண்டவர். உயர்ந்த சிந்தனையும் ஆன்மீக ஞானமும் அனுபவமும் நிறைந்தவர் நோய்வாய்ப்பட்டு இருந்தும் தற்சமயம் சுகதேகியாகி வருகை தந்தமையையிட்டு தங்களை வரவேற்பதில் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய நன்நாளில் எமது அழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதம விருந்தினர் சண்டிலிப்பாய்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு. S. சிவானந்தராஜா அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர

பாடசாலையின் வளர்ச்சி கருதி ஆலோசனைகள் கேட்கின்ற வேளையில் சிறந்த கருத்துக்களைக் கூறி வழிப்படுத்துவது மட்டுமன்றி எதனையும் சுலபமாகச் செய்கின்ற வழிமுறைகளையும் எடுத்துக் கூறுவர். அன்பும் பண்பும், கலைஞானமும் மிக்க தாங்கள், எங்கள் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பிப்பதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைவதுடன், அவர்களை வருக வருகவென வரவேற்கின்றோம்.

அடுத்து சிறப்பு விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி. மெஜிதா. தினேசன் அவர்கள் எமது மாணவச் செல்வங்களுக்கு சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அன்பளிப்புப் பொருட்களை வழங்கி வருகிறார். இதனால் மாணவர்களின் வைப்புச் செய்யும் அளவு அதிகரித்துக் காணப்படுகிறது. இன்றைய நன்நாளில் தாங்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்தமையையிட்டு மகிழ்வடைவதுடன் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் தங்களைப் பெருமையுடன் வரவேற்கின்றேன்.

அடுத்து கௌரவ விருந்தினராக வருகை தந்திருக்கும் திருமதி பராசக்தி சுப்பிரமணியம் அவர்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று இப்பாடசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு கடந்த வருடத்திலிருந்து கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றார். அப்படிப்பட்ட

தந்தமையையிட்டு மகிழ்வதுடன் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் தங்களைப் பெருமையுடன் வரவேற்கின்றேன்.

அடுத்து நினைவுப்பேருரை ஆற்றுவதற்காக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய கலாநிதி.R.விஜயகுமாரன் சிரேஸ்ர விரிவுரையாளராக யாழ் பல்கலைக்கழகத்தில் நிதி முகாமைத்துவத்துறையில் கடமையாற்றுகிறார். தாங்கள் இன்றைய விழாவில் நினைவுப்பேருரை ஆற்றுவது எமக்குப் பெருமை தருவதுடன் அவரை வரவேற்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**முகாமைத்துவம்**

எமது பாடசாலையில் முகாமைத்துவக்குழு மிகச் சிறப்பாகச் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் எமது பாடசாலையின் அபிருவித்தி நோக்கிய செயற்பாடுகளை முகாமை செய்து நடைமுறைப்படுத்த அனைவரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். பாடசாலையின் நிர்வாகக் கட்டமைப்பு நன்கு பரவலாக்கப்பட்டு ஆசிரியர்கள் ஒவ்வொருவரிடமும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. உதவி அதிபர் திருமதி.வசந்தாதேவி செல்வரஞ்சன், திருமதி.சுகிர்தா குணேந்திரராஜா ஆகியோர் அலுவலக வேலைகளில் எனக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டு பாடசாலை அபிவிருத்திக்கு பெரிதும் பங்காற்றுகின்றனர். திருமதி.ஜெயக்குமாரி சந்திரசிறி பாடசாலை அபிவிருத்திக்குழு பொருளாளராகக் கடமையாற்றுகின்றார். தகவல் தளத்தில் தரவேற்றம் (EMISS) உடனுக்குடன் நிறைவேற்றும் எமது பாடசாலை ஆசிரியை திருமதி.ந.காண்டீபன் அவர்களுக்கு எனது நன்றிகள். நிர்வாகம்

சம்பந்தமான சகல விடயங்களையும் கணினி மயப்படுத்தும் ஆசிரியை திருமதி பா.சஞ்ஜீவன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

### அதிபர்

2014ம் ஆண்டு இப்பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று மூன்று வருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில் இப்பாடசாலையில் பரிசளிப்பு விழாவிற்கு தலைமைதாங்குவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். மாணவர்களின் கற்றல் அடைவு மட்டத்திலும் இணைபாடவிதானச் செயற்பாட்டிலும் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காணப்படுகின்றது. எமது மாணவர்கள் பெரும்பாலானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பிள்ளைகளாக இருந்தாலும் கல்வித் திணைக்களத்தினர், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் பெருமுயற்சி காரணமாக மாணவர்களின் ஆற்றலும் திறமையும் வெளிக்கொணரப்பட்டு வருகின்றது.

### மாணவ முதல்வர்கள்

சிரேஸ்ர மாணவ தலைவன் – செல்வன் த.கஜன்

சிரேஸ்ர மாணவ தலைவி – செல்வி. த.தாட்சாயினி

இவர்களுடன் மாணவப் பிரதிநிதிகள் மாணவர்களுக்கு வழிகாட்டியாகச் சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

### பாடசாலை சுகாதாரத் திட்டம்

சுகாதாரப் பரிசோதகர் திரு.S.முருகானந்தம் அவர்கள் தேவை ஏற்படும் வேளையில் பாடசாலைக்கு வருகை தந்து

மாணவர்களுக்கான விற்றமின் மாத்திரைகள் வழங்கியும், டெங்கு ஒழிப்பு தொடர்பாக பாடசாலைச் சுற்றாடலை அவதானித்து வருகிறார்.

சுகாதாரக்கழகத்தினர் டெங்கு ஒழிப்புச் சிரமதானங்கள் பாடசாலைச் சூழலின் தூய்மை பேணல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். மாகாணத்தினால் நடாத்தப்பட்ட சுகாதார மேம்பாடு பாடசாலைக்கான தங்கப்பதக்கத்தை எமது பாடசாலை பெற்றுக் கொண்டமை பாராட்டக்கூடிய விடயம் சுகாதாரக்கழக உறுப்பினர்களுக்கு எனது நன்றிகள்.

## ஆசிரியர் கழகம்

தலைவர் - திருமதி.அ.சிவஞானம்

செயலாளர் - திருமதி.ந.காண்டீபன்

பொருளாளர் - திருமதி.ப.சந்திரரூபன்

பாடசாலை – அபிவிருத்திக்குழு

பாடசாலை அபிவிருத்திக்குழு பாடசாலை வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இதன் செயலாளர் திருமதி.ஜெயகௌரி பாலகிருஸ்ணன் செயற்படுகின்றார். பாடசாலையின் அபிவிருத்திக் குழு, பாடசாலையின் பரிசளிப்பு விழா, விளையாட்டுப்போட்டி மற்றும் பாடசாலையின் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதிலும் நிறைவேற்றுவதிலும் ஈடுபடுகின்றது. இக்குழுவின் பணி பாராட்டத்தக்கது.

## இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்

எமது பாடசாலையில் தமது சேவையை அர்ப்பணிப்போடு வழங்கி வந்த திருமதி.செந்தினி ஜெயக்குமார் அதிபர் தரம் 111 சித்தியடைந்து யா/இணுவில் மத்திய கல்லூரியில் பிரதி அதிபராக நியமனம் பெற்றுச் சென்றுள்ளார். திருமதி. லதா பத்மநாதன், அதிபர் தரம் 111 சித்தியடைந்து யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் அதிபர் நியமனம் பெற்றுச் சென்றுள்ளார். திருமதி.தமயந்தி வரதராஜ் யா/வேலனை மேற்கு நடராஜ வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவர்களின் இடமாற்றம் பாடசாலை சமூகத்திற்கு மிகுந்த கவலையளிக்கிறது. ஆயினும் சென்ற இடத்தில் சிறப்பாக செயற்பட வாழ்த்துகின்றோம்.

எமது பாடசாலையில் 13.05.2005 இல் இருந்து அதிபராகக் கடமையாற்றி 17.01.2014 இல் இடமாற்றம் பெற்றுச் சென்ற முன்னாள் அதிபர் உயர்திரு.நா.தனபாலசிங்கம் அவர்கள் பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தியில் காட்டிய அக்கறையும் கற்றலுக்கான அடித்தளமும் இன்று பாடசாலை மாகாணமட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஏதுவாயிற்று. இப்படிப்பட்ட சிறந்த அதிபர் யா/வட்டு இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்து 17.07.2017 அன்று ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். அவர் ஓய்வு பெற்றுச் சென்றாலும் இப்பாடசாலை மீதும் சமூகத்தினர் மீதும் மிகுந்த அக்கறையும், அன்பும் கொண்டவர். அவர் தன்னுடைய ஓய்வுக் காலத்தில் நோய் நொடியின்றி மகிழ்ச்சியாக வாழ எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

## புதிதாக இணைந்த ஆசிரியர்

எமது பாடசாலைக்கு இவ்வருடம் புதிதாக இணைந்த ஆசிரியராக திருமதி.பானுரேகா சஞ்ஜீவன் வருகை தந்துள்ளார். இவர் பாடசாலையின் களநிலைமைக்கமைய தமது சேவையை சிறப்பாக வழங்க முன்வந்துள்ளனர். இவரைப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

## மாணவ முதல்வர்கள்

எமது பாடசாலையின் மாணவ முதல்வர்கள் ஒழுங்கையும் பாடசாலையின் பௌதீக வளங்களையும் கண்காணித்தல் அவர்களின் கடமையாக உள்ளது. அத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட கடமைகளையும் பொறுப்புக்களையும் சிரேஸ்ட மாணவ தலைவரின் தலைமையில் அதிபர் ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

## இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

இணைபாடவிதானச் செயற்பாடுகளாக விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி, வினாடிவினா போட்டி, அனர்த்த முகாமைத்தவப் போட்டி மற்றும் ஆரம்ப பிரிவுக்கான சித்திரம், திருக்குறள், பண்ணிசை, துரித கணிதம், வாய்ப்பாடு மனனப் போட்டி, சிங்களம் மற்றும் நாடகம் போன்ற போட்டிகளில் பங்குபற்றி குடும்பமட்டம், கோட்ட மட்டம், வலயமட்டம் போன்றவற்றில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் தமிழ்த்தினப் போட்டியில் செல்வி.பூ.சந்தியா 3ம்

இடத்தினை கோட்டமட்டத்தில் பெற்றுள்ளார். ஆண்களுக்கான நீளம் பாய்தல், உயரம் பாய்தலில் செல்வன் பா.பானுஜன் கோட்டமட்டத்தில் 1ம் இடத்தினையும் வலயமட்டத்தில் முதலாம் இடத்தினையும் பெற்று மாகாணப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார். சமூகவிஞ்ஞானப் போட்டியில் செல்வி.பூ.சந்தியா வலயமட்டத்தில் முதலாம் இடத்தையும், த.பிரித்திகா வலயமட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளனர். இவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்களும் நன்றிகளும்.



செல்வன் பா.பானுஜன்

**உயரம் பாய்தல்**

கோட்டம் 1ம் இடம்,

வலயம் 1ம் இடம்

**நீளம்பாய்தல்**

கோட்டம் 1ம் இடம்,

வலயம் 1ம் இடம்

மாகாணம் · 6ம் இடம்



செல்வி பூ சந்தியா

**தமிழ்த்தினப் போட்டி**

**பேச்சு** .- கோட்டம் 3ம் இடம்

**சமூக விஞ்ஞானப் போட்டி**

வலயம் 1ம் இடம்

(மாகாணமட்டத்திற்குத் தெரிவாகியுள்ளார்)



செல்வி த. பிரித்திகா -

**சமூக விஞ்ஞானப் போட்டி –**

வலயம் 3ம் இடம்

(மாகாணமட்டத்திற்குத் தெரிவாகியுள்ளார்)

**மன்றங்கள்**

மாணவர்களிடம் மறைந்திருக்கும் ஆளுமைப் பண்புகளை வெளிக்கொண்டுவரும் மன்றங்களாக மாணவர் மன்றங்கள் செயற்பட்டு வருகின்றன. அந்தவகையில் 1-5 ஆரம்பக்கல்வி மன்றமும், 6,7,8,9 பாடரீதியான மன்றங்கள் தனித்தனியே செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்மன்றங்கள் சகல மாணவர்களையும் பங்குபெறச் செய்து அவர்களது திறமைகளை வெளிக்கொண்டு வருகின்றன.

**மன்றப் பொறுப்பாசிரியர்கள்**

1. ஆரம்பக்கல்வி மன்றம் - திருமதி. ஜெ. சந்திரசிறி
2. இந்து மன்றம் - திருமதி. ப. சந்திரரூபன்
3. தமிழ்மன்றம் - திருமதி.ப.சந்திரரூபன்
4. ஆங்கில மன்றம் - திருமதி.வ.செல்வரஞ்சன்

5. கணித விஞ்ஞான மன்றம் - திருமதி.லீ.அன்பரசன்
6. சுகாதார உளநல மன்றம் - திரு.அ.சயந்தன்
7. சமூக விஞ்ஞான மன்றம் - திருமதி.பா.சஞ்ஜீவன்

**பாடசாலைத் தேவைகள்**

1. தரம் 1,2 செயற்பாட்டுடன் கூடிய வகுப்பறை
2. மல்ரிமீடியா,
3. சிறுவர் பூங்கா

**பாடசாலையின் பலம்**

- ஆரம்பக்கல்வி பயிற்சி பெற்ற அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள்
- சகல ஆசிரியர்களும் நேர் வகுப்பறை முகாமைத்துவ செயலமர்வில் பங்கு பற்றி பிள்ளைநேய பாடசாலை அணுகுமுறையைப் பின்பற்றி கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளல்.
- பாடசாலை அபிவிருத்திக் குழுவினரின் பங்களிப்பு
- நலன் விரும்பிகள் தாமாக உதவ முன்வருதல்
- இணைப்பாட விதானப் போட்டிகளில் மாகாணமட்டம் வரை பங்குபற்றியமை
- புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு வெட்டுப்புள்ளியை அண்மித்தமை
- ஆசிரியர் வராத வேளையிலும் பதில் ஆசிரியரை நியமிக்கும் அளவிற்கு ஆசிரிய வளம் உண்டு.

## பாடசாலையின் பலவீனங்களும் சவால்களும்

- பெற்றோர் அக்கறையற்ற தன்மையினால் சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகள், திருவிழாக்கள் போன்றவற்றிற்கு மாணவர்களை பாடசாலை நாட்களில் அழைத்துச் செல்வதால் கற்றல் கற்பித்தலை மாணவர்களுக்கு திறம்பட மேற்கொள்ள முடியாமை. (ஒழுங்கான வரவின்மை)
- ஆசிரியர்களை மாதத்தில் ஒரு தடவை ஆயினும் பெற்றோர் வந்து சந்தித்து தங்கள் பிள்ளைகளின் நிலையை அறியாதிருத்தல்
- வீட்டில் இரவு நேரத்தில் கற்பதற்குரிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதில் மாணவர்களுக்கு ஏற்படும் சிரமம்.
- கற்றல் சாதனங்கள் பாடசாலையினால் வழங்கினாலும் தினமும் பாடசாலைக்கு கொண்டு வராமல் வருவதனால் ஆசிரியர்கள் கற்பிக்கும் போது சிரமங்களை எதிர்கொள்ளல்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

கடந்த வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 4 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள். செல்வி. பூபாலசிங்கம் சந்தியா 133 புள்ளிகளைப் பெற்று பாடசாலை வரலாற்றில் பெற்றுக் கொள்ளாத புள்ளியைப் பெற்றுக்கொண்டார். இவரை வழிப்படுத்திய வகுப்பாசிரியருக்கு எனது நன்றிகள்.

**புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்**

| இல | மாணவர் பெயர் | பெற்ற புள்ளி |
|---|---|---|
| 1 | பூ. சந்தியா | 133 |
| 2 | த. பிரித்திகா | 121 |
| 3 | க. யதுசன் | 112 |
| 4 | ஞா. நர்மிகா | 109 |
| 5 | ர. சந்தியா | 96 |
| 6 | ஜீ. நேருஜா | 96 |
| 7 | எ.வேணுஜா | 95 |
| 8 | இ.தனுசன் | 94 |
| 9 | இ.தக்சாயினி | 90 |
| 10 | சு.வக்சனா | 76 |
| 11 | வ.முவேந்தா | 76 |
| 12 | ஜெ.ரேனுஜன் | 76 |
| 13 | இ.கம்சன் | 73 |
| 14 | ப.ஜீவந்தி | 71 |

**வலயக்கல்வி அலுவலகத்தின் சிறு திருத்த நிதி**

ஆரம்பப்பிரிவு நிலம் (190 அடி) கொத்திப் பூசி திருத்தம் செய்யப்பட்டுள்ளது

**அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை**

ஆசிரியர்களுக்கான நவீன முறையில் இரண்டு மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## ஞாபகார்த்த பரிசில்கள்

அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக திருமதி. பராசக்தி சுப்பிரமணியம் அவர்களால் உருவாக்கப்பட்ட புலமைப்பரிசில் நிதியத்தில் இருந்து 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற இப்பாடசாலையில் தரம் 6 – 9 வரை கற்விகற்கும் மாணவர்களுக்கு 2016 இல் இருந்து கற்றல் உபகரணங்கள், சப்பாத்து. புத்தகப் பை என்பன தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. இடைநிலைக் கல்விக்குரிய நிதியமாக வழங்க முன்வந்திருக்கும் திருமதி பராசக்தி சுப்பிரமணியம் அவர்களுக்கும் அவரது பிள்ளைகளுக்கும் எனது வாழ்த்துக்கள்.

## கற்றலுக்கான உதவி வழங்கியோர்

1. திருமதி.S.விஜயலதா (UK) , தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான தமிழ், கணிதம், சுற்றாடல் ஆகிய பயிற்சிப் புத்தகங்களை இலவசமாக வழங்கி வருகிறார்.
2. திருமதி.பராசக்தி சுப்பிரமணியம் (Canada) தரம் 3 மாணவர்களுக்கான தமிழ், கணிதம், சுற்றாடல் ஆகிய பயிற்சிப் புத்தகங்களை இலவசமாக வழங்கிவருகிறார்.
3. திரு.வை பரமநாதன் (UK) தினக்குரல் புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களை பெற ஆவன செய்து வருகிறார்.

4. திரு.மு.றூபேந்திரன் (UK) இப்பாடசாயில் சகல மாணவர்களுக்கும் பால் கடந்த வருடம் புரட்டாதி மாதத்திலிருந்து 6 மாதங்கள் வழங்கியுள்ளார்.

5. Dr.தமயந்தி ஜெயமோகன் மாணவர்களின் பயன்பாட்டிற்காக நான்கு மடிக்கணினிகள் வழங்கியுள்ளார்.

6. விளையாட்டு மைதான பின்புற மதில் கட்டுவதற்கான திருமதி.இந்திராணி சிவபாதசுந்தரம், அமரர்களான சின்னத்தம்பி தர்மலிங்கம் , செல்லம்மா தர்மலிங்கம் ஞாபகார்த்தமாக ரூபா 100000.00 வழங்கியுள்ளார். மேலும் திருமதி இந்திராணி சிவபாதசுந்தரம் அவர்கள் சி.செந்தூரன், சி.மகிந்தன் ஆகிய தனது பிள்ளைகளின் பிறந்த தினத்தை முன்னிட்டு 20 மாணவர்களுக்கு 500 ரூபா வீதம் 10000 ரூபாவை வழங்கியுள்ளார்.

7. அமரர் கைலாயபிள்ளை ஞாபகார்த்தமாக பரிசளிப்பு விழாவிற்கு வருடந்தோறும் உதவியைப் பெற்றுத் தரும் திரு திருமதி ஜெயபாலன் குடும்பத்தினருக்கும் எனது வாழ்த்துக்கள்

8. இல்ல மெய்வல்லுநர் போட்டியை வருடந் தோறும் சிறப்பாக நடத்த அமரர் சரஸ்வதி சுப்பிரமணியச் செட்டியார் ஞாபகார்த்த நிதி வருடாந்தம் வழங்கும் , அவரது மகன் திரு. குகன் செட்டியார் அவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

9. வருடாந்தம் தரம் 1 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் கால்கோள் விழாவிற்கு பரிசில்களும் வழங்கி வரும் பழையமாணவர் வைத்தியர் N.சிவபாலன் தம்பதியினருக்கும் எனது வாழ்த்துக்கள்.

10. திரு.சைமன் அவர்கள் வகுப்பு நிலையில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி உதவியுள்ளார்

மேற்கூறப்பட்ட கற்றலுக்கான உதவிகள் வழங்கிய உள்நாட்டு, வெளிநாட்டு அன்பு உள்ளங்களுக்கு பாடசாலை சமூகத்தின் சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கும் எனது ஆசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்

## கணினி வகுப்புக்கள்

எமது பாடசாலையில் கல்விகற்கின்ற மாணவர்கள் ஓய்வான பாடவேளைகளில் இலவசமாகக் கணினிக் கல்வியை மேற்கொள்வதற்கு எமது பாடசாலையின் பழைய மாணவி Dr. தமயந்தி ஜெயமோகன் (அமெரிக்கா) அவர்களால் 4 மடிக்கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. எனவே பாடசாலைக் காலத்தில் இலவசமாகக் கணினிக் கல்வியை மேற்கொள்வதற்கு எமது பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளமை ஓர் வரப்பிரசாதமாகும். இதற்குப் பொறுப்பாக திரு.அ.சயந்தன் அவர்களும், திருமதி.பா.சஞ்ஜீவன் அவர்களும் செயற்படுகின்றார்கள்.

## நிறைவுரை

இன்றைய விழாவிற்கு வருகை தந்து எம்மையெல்லாம் சிறப்பித்துக் கொண்டிருக்கும் விருந்தினர்கள், மற்றும் அனைவருக்கும் விழாவிற்கான உதவிகளைப் பலவழிகளிலும் புரிந்த பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாணவர் சங்கத்தினர், நலன்விரும்பிகள், அனைவருக்கும், அமரர் கைலாய பிள்ளை ஞாபகார்த்தமாக பரிசளிப்பு விழாவிற்கு வருடந்தோறும் உதவியைப் பெற்றுத் தரும் திரு திருமதி ஜெயபாலன் குடும்பத்தினருக்கும் என்றென்றும் நிறைவான நன்றிகளைக் கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

22.07.2017

திருமதி.அ.சிவஞானம்
அதிபர்

பரிசு பெறும் மாணவர் விபரம் - 2016

| தரம் | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| 1 | த.தனுசியன் | சமயம், கணிதம், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | சு.லிசானா | தமிழ் | 1ம் இடம் |
| | உ.தேஜா | கணிதம் | 1ம் இடம் |
| | | சமயம்,தமிழ்,சுற்றாடல் | 3ம் இடம் |
| | ற.றக்சன் | சமயம், சுற்றாடல் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| | | | |
| 2 | இ.லோகிதன் | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| | சோ.சானுஜன் | சமயம், தமிழ், கணிதம் | 2ம் இடம் |
| | நா.கலைவேந்தினி | சுற்றாடல் | 2ம் இடம் |
| | | தமிழ், கணிதம் | 3ம் இடம் |
| | ஜெ.பஸ்மிலா | சமயம், | 3ம் இடம் |
| | ஸ்.தஸ்வின் | சுற்றாடல் | 3ம் இடம் |
| | | | |
| 3 | இ.விவுசனா | சமயம், தமிழ், ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | கணிதம், சுற்றாடல் | 2ம் இடம் |
| | ஜெ.டெனிஸ்ரா | கணிதம், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | சமயம், தமிழ், ஆங்கிலம் | 2ம் இடம் |
| | க.சஞ்சுகா | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | | |
| | | சமயம்,சுற்றாடல் | 3ம் இடம் |
| | சு.யதுசன் | தமிழ், ஆங்கிலம் | 3ம் இடம் |

| தரம் | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| | பா.மதுசாயினி | சமயம், தமிழ் | 1ம் இடம் |
| | | சுற்றாடல் | 2ம் இடம் |
| | | கணிதம் , ஆங்கிலம் | 3ம் இடம் |
| | ர.சொப்னா | கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் | 1ம் இடம் |
| 4 | 10 | சமயம் , தமிழ் | 3ம் இடம் |
| | பா.யசோதாயினி | சமயம், தமிழ், கணிதம் | 2ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| | ச.தேனுகன் | ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | | |
| | த.பிரித்திகா | சமயம், கணிதம், ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| | பூ.சந்தியா | சுற்றாடல் | 1ம் இடம் |
| 5 | | சமயம், ஆங்கிலம் | 2ம் இடம் |
| | | தமிழ், கணிதம் | 3ம் இடம் |
| | ஜீ. நேருஜா | தமிழ் | 1ம் இடம் |
| | | கணிதம், சுற்றாடல் | 2ம் இடம் |
| | | ஆங்கிலம் | 3ம் இடம் |
| | ஞா. நர்மிகா | சமயம் | 2ம் இடம் |

## பரிசு பெறும் மாணவர் விபரம் - 2016

| தரம் | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| | த.தனுசியன் | சமயம், கணிதம், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | தமிழ் | 2ம் இடம் |
| | சு.லிசானா | தமிழ் | 1ம் இடம் |
| 1 | உ.தேஜா | கணிதம் | 1ம் இடம் |
| | | சமயம்,தமிழ்,சுற்றாடல் | 3ம் இடம் |
| | ற.றக்சன் | சமயம், சுற்றாடல் | 2ம் இடம் |
| | | கணிதம் | 3ம் இடம் |
| | | | |
| | இ.லோகிதன் | சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல் | 1ம் இடம் |
| | | சுற்றாடல் | 3ம் இடம் |
| | சோ.சானுஜன் | சமயம், தமிழ், கணிதம் | 2ம் இடம் |
| 2 | நா.கலைவேந்தினி | சுற்றாடல் | 2ம் இடம் |
| | | தமிழ், கணிதம் | 3ம் இடம் |
| | ஜெ.பஸ்மிலா | சமயம், | 3ம் இடம் |
| | ஸ்.தஸ்வின் | சுற்றாடல் | 3ம் இடம் |
| | | | |
| | இ.விவுசனா | சமயம், தமிழ், ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | கணிதம், சுற்றாடல் | 2ம் இடம் |
| | ஜெ.டெனிஸ்ரா | கணிதம், சுற்றாடல் | 1ம் இடம் |
| 3 | | சமயம், தமிழ், ஆங்கிலம் | 2ம் இடம் |
| | க.சஞ்சுகா | ஆங்கிலம் | 1ம் இடம் |
| | | | |
| | | சமயம்,சுற்றாடல் | 3ம் இடம் |
| | சு.யதுசன் | தமிழ், ஆங்கிலம் | 3ம் இடம் |

| தரம் | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| 7 | பி.தேவயாளினி | சமயம், தமிழ், ஆங்கிலம், வரலாறு, அழகியல் | 1ம் இடம் |
| | | புவியியல், சுகாதாரம் | 2ம் இடம் |
| | | கணிதம், ஆங்கிலம், குடியுரிமை, தொழில்நுட்பம் | 3ம் இடம் |
| | கோ.அபினாஸ் | தமிழ், கணிதம், விஞ்ஞானம்,புவியியல், குடியுரிமை, தொழில்நுட்பம், சுகாதாரம் | 1ம் இடம் |
| | | ஆங்கிலம், சமயம் | 2ம் இடம் |
| | | வரலாறு, அழகியல் | 3ம் இடம் |
| | பா.பானுஜன் | தமிழ், கணிதம்,விஞ்ஞானம், வரலாறு, தொழில்நுட்பம், குடியுரிமை | 2ம் இடம் |
| | | சமயம் ஆங்கிலம், புவியியல், சுகாதாரம் | 3ம் இடம் |
| | ர.தமயந்தி | அழகியல் | 2ம் இடம் |

| தரம் | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| 8 | த.தாட்சாயினி | சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, அழகியல், தொழில்நுட்பம், சுகாதாரம் | 1ம் இடம் |
| | | தமிழ், | 2ம் இடம் |
| | சு.தர்சிகா | தமிழ், கணிதம், | 1ம் இடம் |
| | | கணிதம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம் | 2ம் இடம் |
| | | சமயம், கணிதம், விஞ்ஞானம், அழகியல், தொழில்நுட்பம் | 3ம் இடம் |
| | சு.லக்சிகா | சமயம், ஆங்கிலம், அழகியல், தொழில்நுட்பம், விஞ்ஞானம் | 2ம் இடம் |
| | | தமிழ், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம் | 3ம் இடம் |
| | இ.சங்கீதா | ஆங்கிலம் | |

| | | | |
|---|---|---|---|
| 9 | ஜெ.நாகலக்சன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, அழகியல், தொழில்நுட்பம், சுகாதாரம் | 1ம் இடம் |
| | த.சஞ்ஜீவன் | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, அழகியல், தொழில்நுட்பம், சுகாதாரம் | 2ம் இடம் |
| | இ.தனுஸ்ரன் | சமயம் , தொழில்நுட்பம | 3ம் இடம் |
| | பா.அபிராஜ் | தமிழ், கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம் | 3ம் இடம் |
| | செ.பவிதா | ஆங்கிலம், வரலாறு | 3ம் இடம் |
| | வ.வைஸ்ணவி | பவியியல், அழகியல் | 3ம் இடம் |
| | க.தர்மினி | குடியுரிமை | 3ம் இடம் |

## விசேட பரிசு பெறுவோர் விபரம்

**மாணவர்கள்**

பா.பானுஜன் - உயரம் பாய்தல் - கோட்டம் 1ம் இடம்,

வலயம் 1ம் இடம்

பா.பானுஜன் - நீளம் பாய்தல் - கோட்டம் 1ம் இடம்,

வலயம் 1ம் இடம்

மாகாணம் - 6ம் இடம்

~~பூ. சந்தியா – பேச்சு - கோட்டம் 3ம் இடம்~~

பூ. சந்தியா – சமூக விஞ்ஞானப் போட்டி – வலயம் 1ம் இடம்

(மாகாண மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளார்)

த.பிரித்திகா - சமூக விஞ்ஞானப் போட்டி – வலயம் 3ம் இடம்

(மாகாண மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளார்)

**விசேட தேவையுடைய மாணவன்**

ர.கனிஸ்ரன்

**பாடசாலை வேலைகளில் அர்ப்பணிப்போடு செயற்பட்ட மாணவன்**

த.கஜன்

- **ஆசிரியர்கள்**

**பத்து நாட்களுக்குக் குறைந்த லீவினை எடுத்த ஆசிரியர்கள்**

1. திருமதி.அ.சிவஞானம் - அதிபர்
2. திருமதி.ஜெ.சந்திரசிறி – ஆசிரியர்
3. திருமதி.ப.சந்திரரூபன் - ஆசிரியர்
4. திரு.அ.சயந்தன் - ஆசிரியர்

**இணைபாடவிதானச் செயற்பாட்டில் அர்ப்பணிப்போடு செயற்பட்டு மாணவர்களை கோட்ட வலய மாகாண மட்ட போட்டிகளை வெற்றிபெறச் செய்த ஆசிரியர்களுக்கான பரிசு**

திருமதி.ப.சந்திரரூபன் - கோட்டமட்டம் 3ம் இடம்

திரு.அ.சயந்தன் - கோட்டம், வலயம், நீளம்பாய்தல், உயரம்பாய்தல்

திருமதி.பா.சஞ்ஜீவன் - கோட்டம் , வலயம் சமூக விஞ்ஞானப் போட்டி


**மாணவர்களின் ஒழுங்கான வரவு**

1. தரம் 1 – சு. சுதர்சினி
2. தரம் 2 – த.தனுசியன்
3. தரம் 3 – சு.கபிநயா
4. தரம் 4 – சு.சுதர்சன், ற .லக்சுமன்
5. தரம் 5 – நா.நதீபா
6. தரம் 6 – த.பிரித்திகா
7. தரம் 7 - இ.வித்தியா
8. தரம் 8 -- பா.பானுஜன்
9. தரம் 9 - இ.சங்கீதா

## ஆசிரியர் விபரம்

| இல | பெயர் | தரம் | பதவி | தகைமை |
|---|---|---|---|---|
| 1 | திருமதி. அம்பிகை. சிவஞானம் | SLPS 2 | ஆதிபர் | B.A,PGDE,M.ed |
| 2 | திருமதி. வசந்தாதேவி. செல்வரஞ்சன் | SLTS-I | உதவி அதிபர் | ENGLISH TRAINED |
| 3 | திருமதி. லீலா. அன்பரசன் | SLTS-I | ஆசிரியர் | SCIENCE,MATHS TRAINED |
| 4 | திருமதி. ஜெயக்குமாரி .சந்திரசிறி | SLTS-I | ஆசிரியர் | B.COM, PRIMARY TRAINED, PGDE |
| 5 | திருமதி. சுகிர்தா. குணேந்திரராஜா | SLTS-1 | ஆசிரியர் | B.Com, PGDE |
| 6 | திரு. கைலாயபிள்ளை. உதயகாந்தன் | SLTS-2-II | ஆசிரியர் | Bsc ( PGDE ) |
| 7 | திருமதி. பன்னீர்ச்செல்வி. சந்திரரூபன் | SLTS-2-II | ஆசிரியர் | B.A, PGDE |
| 8 | திருமதி. தனலட்சுமி. காசிநாதன் | SLTS-3-I | ஆசிரியர் | B.A, PGDE |
| 9 | திருமதி. தயாளினி. முருகானந்தன் | SLTS-3-I | ஆசிரியர் | NDIT, PRIMARY TRAINED |
| 10 | திருமதி. யாழினி. சோதீஸ்வரன் | SLTS-2-II | ஆசிரியர் | B.F.A (MUSIC) |
| 11 | திருமதி.சைலஜா. பிரகதீஸ் | SLTS-3-I | ஆசிரியர் | B.F.A (DANCE) |
| 12 | திருமதி.ஜெயச்சித்திரா இலங்கேஸ்வரன் | SLTS-3-I | ஆசிரியர் | PRIMARYTRAINED |

| இல | பெயர் | தரம் | பதவி | தகைமை |
|---|---|---|---|---|
| 13 | திருமதி. நளாயினி. காண்டீபன் | SLTS-3-I | ஆசிரியர் | NDIT, PRIMARY |
| [illegible] | திரு. அழகரத்தினம் சயந்தன் | SLTS-3-I | ஆசிரியர் | Bsc |
| 15 | திருமதி. பானுரேகா சஞ்ஜீவன் | SLTS-2-II | ஆசிரியர் | BA |
| 16 | திருமதி. துஷாந்தி ஞானேந்திரன் (இணைப்பு) | SLTS-3-I | ஆசிரியர் | BFA |



கல்விசார் ஊழியர்கள் - 2017

# நிகழ்ச்சி நிரல்

விருந்தினர்களை வரவேற்றல்

மங்கள விளக்கேற்றல்

இறைவணக்கம்

வரவேற்பு நடனம்

வரவேற்புரை

ஆசியுரை

நிறுவுனர் உரை

அதிபரின் பரிசுத்தின அறிக்கை

பரிசில் வழங்கல் - ஆரம்பப்பிரிவு

சிறப்பு விருந்தினர் உரை

பரிசில் வழங்கல் - இடைநிலைப்பிரிவு

விசேட பரிசில் வழங்கல்

பிரதம விருந்தினர் உரை

கலை நிகழ்வுகள்

நன்றியுரை

பாடசாலைக்கீதம்

# பாடசாலைக் கீதம்

உயரப்புலம் குணபாலன் வித்தியசாலை வாழ்கவே
உத்துங்க விநாயகர் அருள் என்றும் பெருகவே
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

ஆயிரத்து தொளாயிரத்து அறுபதாம் ஆண்டில்
அன்பர் மூவர் செய்த நல்ல பெரு முயற்றியால்
தூய எங்கள் சைவநெறி துலங்கிட வேண்டும்
தொடங்கினால் ஊரறிதன சுடர்விட்டோங்கவே
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

கல்வி கலை பண்பாடு கற்போமிங்கு நாம்
கடமையினை கண்ணெனவே மதிப்போம் இங்கு நாம்
உண்மை அன்பு உழைப்பு என்ற உத்தம கொள்கை
உணர்ந்து உயர்ந்திடுவோமே ஒழுக்க சீலராய்
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

ஊதா மஞ்சள் நிறக் கொடியும் இங்கு உயரப் பறக்குதே
உழைப்பு செழிப்பு இரண்டினையும் எடுத்துக்காட்டுதே
போதனையும் சாதனையும் இணைந்து இருக்குதே
பொருத்தமான கல்வி பெற வாய்ப்புக் கிட்டுதே
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே

நாடுவாழ தமிழ்வாழ நம்மவர் வாழ
நமக்கு கல்வி ஊட்டும் வித்தியவாலை வாழ்கவே
ஏடுதூக்கி நிற்கின்ற எங்களையெல்லாம்
இந்த நாட்டின் தலைவராக்கும் அன்னை வாழ்கவே
வாழ்கவே வாழ்கவே வாழ்கவே